விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

**Valampurii**

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 29 வியாழக்கிழமை (12.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114

## படகு கடலில் மூழ்கியதில் ஈழ அகதிகள் நால்வர் பலி

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்திற்கு அருகில் இலங்கை அகதிகள் சென்ற படகு கடலில் மூழ்கியதில் இரு பெண்கள் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு பெண் உட்பட இரண்டு பேர் நீந்தி உயிர் தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைமன்னாரிலிருந்து நேற்று முன்தினம் இந்தியா நோக்கி சென்ற படகு நீரில் மூழ்கியுள்ளது. அகதிகள் சென்ற அப்படகு நேற்று அதிகாலை நடுக்கடலில் ஏற்பட்ட கொந்தளிப்புக் காரணமாக கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து படகோட்டி உட்பட ஆறு பேரும் நீந்தி கரை சேர முற்பட்ட போதும் அதில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைச் சோதனைச் சாவடி தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளது

(வவுனியா)

ஓமந்தைச் சோதனைச் சாவடி தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. ஓமந்தை இராணுவ முன்னரங்கு மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் நடத்திய மோட்டார் தாக்குதலையடுத்து பகலிலிருந்து தற்காலிகமாக மூடப்பட்டது.

எனினும் தமிழ், சிங்கள புத்தாண்டை ஒட்டி இச் சோதனைச் சாவடியை திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்தியநிலையம் தெரிவித்துள்ளது. இதே வேளை கிளிநொச்சிக்கு நோயாளர்களை ஏற்றிக் கொண்டு சென்ற இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன. (ச-3,5)

## அளவெட்டி அம்பன் சந்தியில் சூட்டுக் காயத்துடன் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அம்பன் சந்தியில் நேற்றுக்காலை சூட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சட லமாக மீட்கப்பட்டவர் வட்டு.கிழக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையும் தச்சுத் தொழிலாளியுமான பாலசுப்பிரமணியம் சிவகணேசன் (வயது-31) என்ற குடும்பஸ்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் காலை முதல் காணாமல் போயிருந்ததாகவும் நேற்றுக் காலை சூட்டுக் காயங்களுடன் சம்பவ இடத்தில் காணப்பட்டதாகவும் உறவினர்களால் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான (04 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் முள்ளிக்குளத்தில் தாக்குதல்

## புலிகள் மீதான தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்

### இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)

முள்ளிக்குளத்தில் விடுதலைப்புலிகளின் மீது படையினர் நடாத்திய பதில் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. *(04 ஆம் பக்கம் பார்க்க)*

## முன்னேற்ற முயற்சி முறியடிப்பு 8 இராணுவ சடலங்கள் மீட்பு

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

மன்னார் முள்ளிக்குளத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். இதன்போது இராணுவத்தினரின் 8 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். *(04 ஆம் பக்கம் பார்க்க)*

## றியல் அட்மிரல்களாக நால்வர் நியமனம்

(கொழும்பு)

கடற்படையில் உள்ள நான்கு கடற்படை அதிகாரிகள் றியல் அட்மிரல்களாகக் கடற்படைத் தளபதி வசந்த கரணகொடவினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பொது நடவடிக்கை பணிப்பாளர் சுசித் வீரசேகர, வடமத்திய கட்டளைத் தளபதி ஜயநாத் கொலம்பகே, பொது சுகாதாரப் பணிப்பாளர் டபிள்யு. ஜெயசேகர, மின்சார மற்றும்

## அரசாங்கச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு ஆதரவுக் கட்சிகள் கூட்டாக அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயற்திட்டங்களுக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் அரசியல் கட்சிகள் தெரிவித்துள்

ந்த அரசாங்கம் நிலையாகவுள்ளதாகவும் இதனால் 2010 ஆம் ஆண்டு வரை தேர்தல் நடத்தப்பட மாட்டாது எனவும் அவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் ஆட்சி அதிகாரத்தை பெறப்போவதாக கூறிவரும் எதிர்க்

## சீரற்ற காலநிலையால் மழை தொடரும்!

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை தொடர்ந்தும் சில தினங்களிற்கு நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் மின்னுற்பத்தி நிலையங்களை அண்டிய பகுதிகளில் காலை 6மணியுடன் முடிபடைந்த 24 மணிநேரத்திற்குள் 75 மி.மி. மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பொது நடவடிக்கை பணிப்பாள்ர் சுசித் வீரசேகர, வடமத்திய கட்டளைத் தளபதி ஜய நாத் கொலம்பகே, பொது சுகாதாரப் பணிப்பாளர் டபிள்யு. ஜெயசேகர, மின்சார மற்றும் மின்னியல் பணிப்பாளர் ஜே.சீ.ஹெட்கம ஆகியோரே றியல் அட்மிரல்களாக பதவி உயர்த்தப்பட்டவர்கள் ஆவர்.

கடற்படையின் வளர்ச்சிக்காகவே இப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச)

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயற் திட்டங்களுக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கே கருத்து வெளியிட்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த அரசாங்கம் நிலையாகவுள்ளதாகவும் இதனால் 2010 ஆம் ஆண்டு வரை தேர்தல் நடத்தப்பட மாட்டாது எனவும் அவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் ஆட்சி அதிகாரத்தை பெறப்போவதாக கூறிவரும் எதிர்க் கட்சித் தலைவர் மாயையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத்தொடர்பில் அரசாங்கம் பாரிய திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-3)

மேலும் மின்னுற்பத்தி நிலையங்களை அண்டிய பகுதிகளில் காலை 6மணியுடன் முடிபடைந்த 24 மணிநேரத்திற்குள் 75 மி.மி. மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 48 வருடங்களில் இவ் வருடமே ஏப்ரல் மாதத்தில் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1959 ஆம் (04 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்புச் செயலரின் பணி குறித்து எதிர்க்கட்சித் தலைவருக்கு தெளிவில்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாதுகாப்புச் செயலாளரின் பணிகள் குறித்து எந்த விதமான தெளிவும் இல்லை என்பது தற்போது தெளிவாகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் நான் எனது கடமையை சிறப்பாகச் செய்துள்ளேன் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளர் பதவியிலிருந்து கோத்தபாய ராஜபக்ஷவை விலக்கிவிட்டு ஜெனரல் ஜாகன பெரேராவை அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, (04 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தியத் தூதுவருடன் பேச்சு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்று முற்பகல் இந்திய உயர்ஸ்தானிகர் அலோப் பிரசாத்தைச் சந்தித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் ஆலயத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலை, அதற்கு இந்தியா உதவ வேண்டியதன் அவசியம் என்பன குறித்து இச் சந்திப்பின் போது தம்மால் வலியுறுத்தப்பட்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்கின்ற கொலைகள், ஆட்கடத்தல்கள் என்பவற்றை தடுக்க இந்தியா கூடுதலான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

நடைமுறைப் பேச்சுவார்த்தைக்கான முனைப்புகள் எவையும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் (04 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தம் நடைபெற்ற இடத்திற்கு சிறுவர்களை அழைத்துச் செல்வதைத் தவிர்ப்போம்
சர்வோதயம்
unicef

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## தென்னாபிரிக்காவுடன் தோல்வி

## உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து சூப்பர் 8 உடன் வெளியேறும் மேற்கிந்தியதீவுகள்

(ஜமேக்கா)

தென்னாபிரிக்காவுடன் 67 ஓட்டங்களால் தோல்வியடைந்த மேற்கிந்திய தீவுகள் அணி அரையிறுதியிலிருந்து முன்னேறும் வாய்ப்பை சொந்த மண்ணில் இழந்தது.

மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் கிரேனாடாவில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள்–தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித்தலைவர் பிரைன் லாரா முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டி.வில்லியர்சின் அதிரடியான ஆட்டத்தால் 50 ஓவர்கள் நிறைவில் 4விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 356 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் டி.வில்லியர்ஸ் 146 ஓட்டங்களையும் ஜக் ஹலீஸ் 81 ஓட்டங்களையும் ஹேசன் கிப்ஸ் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக ஹொரீமோர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 357 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி தென்னாபிரிக்க அணியின் சிறப்பான பந்து வீச்சில் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 67 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ராம் நரேஷ் சர்வான் 92 ஓட்டங்களையும் டரன்பவல் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களை யும் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஷேன் பொலக், ஜக் ஹலிஸ் மற்றும் அணித் தலைவர் கிறேம் ஸ்மித் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

இத் தோல்வியை அடுத்து மேற்கிந்திய தீவுகள் அணி சொந்த மண்ணில் உலகக்கிண்ணத்தை கைப்பற்றும் கனவை, சூப்பர் 8 ஆட்டத்துடனே இழந்து வெளியேறுகின்றது. (ச-5)

அனுசரணை

PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE

இவ்வருட புதுவருட கொடுக்கல் வாங்கலுக்கு மக்கள் வங்கியின் உற்சாகமான உபசரிப்பு!

விசேட சேமிப்புப் பத்திரத்தினை பரிசாக பெறுங்கள்!

நீங்கள் சேமிக்கும் ரூ.25,000 பெறுமதியான புது வருடக் கொடுக்கல்–வாங்கல் சேமிப்பு கணக்கு ரூ.500 பெறுமதியான சேமிப்பு பத்திரம்



புதுவருட சுபநேர கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்ரல் 14 ஆம் திகதி மு.ப.11.00 மணி முதல் எமது அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் உங்களுக்காக திறந்திருக்கும்.

நீங்களும் சுப நேரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்ய மக்கள் வங்கிக்கு வாருங்கள்

## க.பொ.த.சாதாரண தரப் பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

*பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை*

மா.லவண்யா (10 ஏ), சு.அபிராமி (10ஏ), சு.பிரிந்தா (9ஏ,பி), த.இந்துஜா (9ஏ,பி), சி.சர்மி (8ஏ, 2சி), இ.மாதுஜே (7ஏ,2பி,சி), தே.ஜனனி (7ஏ,பி,2சி), கே.நித்தியா (6ஏ,3பி,சி), ந.சுவிந்தி (6ஏ,3பி,சி) வி.மேரி ஞானப்பிரியா(6ஏ,2பி.2சி) ர.லோஜினி (6ஏ,2பி,சி,எஸ்), இ.ஜெயசுதா (5ஏ,4பி,சி), தோ.மேரி பிரிந்தா(5ஏ,4பி,எஸ்), கு.நிரஜா (5ஏ,3பி,2சி), ஸ்ரீ.சாமினி (5ஏ, 3பி, 2சி), சி.நிலானி (5ஏ,3பி,2சி), ம.எசதியா (5ஏ,சி,3எஸ்) (ச)

கலைப்பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

மீள் பரீட்சைகள்-2006

கலைப்பீடம் மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகம்

## அரசுடன் இணைந்த எம்.பிக்கள் மீண்டும் ஐ.தே.கவில் இணைவர்!

### கட்சி வட்டாரங்கள் நம்பிக்கை

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தமது அரசியல் வியூகங்களை வகுத்து மாவட்ட இணைப்பு சபை போன்றவற்றையும் நிறுவி ஒரு இடைத் தேர்தலுக்கு தயாராகி வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் நடைபெறுவதற்கான குறிப்பிட்ட அறிகுறிகள் தோன்றவில்லை. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி எதனையும் எதிர்கொள்ள தன்

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர் உட்பட சில முக்கிய உறுப்பினர்கள் தமது கட்சியில் மீண்டும் இணைவதில் ஆர்வம் கொண்டுள்ளனர் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை அரசாங்கம் தற்போது ஒரு உறுதியான நிலையை நாடாளுமன்றத்தில் கொண்டிருப்பதனால் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் இல்லை என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

## யாழ்.பல்கலை மாணவன் கடத்தப்பட்டமை அச்ச சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது

### மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எமது பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் இறுதியாண்டு சிறப்பு மாணவன் நாகேந்திரம் இராஜலக்ஸ்மன் காணாமற்போய் பின்னர் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எமது கற்றல் செயற்பாடுகளுக்கான சூழல் மிக இறுக்கமாக உள்ள நிலையில் இவ்வாறானதொரு காணாமற் போதல் சம்பவம் நடைபெற்றுள்ளமை எமது மாணவர்கள் மத்தியில் மீளவும் ஒரு அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

எமது மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை குழப்பும் நகர்வுகள் குறித்து அதிர்ச்சி கொள்வதுடன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக தமது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளனர்.

மீண்டும் மீண்டும் கல்வி நடவடிக்கைகளை குழப்பும் விதத்திலான செயற்பாடுகளை தடுப்பது தொடர்பில் உரிய தரப்பினர் கூடிய கவனம் எடுத்து செயற்படவேண்டுகின்றோம் என்றுள்ளது. (எ)

## அனுமதிக்கடிதம் கிடைக்காதவர்கள் வலம்புரியுடன் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டு அனுமதிக்கடிதம் இதுவரை கிடைக்காத மாணவர்கள் இன்று வலம்புரி அலுவலகத்துடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். வரும்போது க.பொ.த.(உயர் தரம்) பரீட்சை பெறுபேற்று மூலப்பிரதி, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வலம்புரி அலுவலக நேரமான காலை 9 மணி முதல் மாலை 3 மணிக்குள் சமுகம் தருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (ச-5)

## கல்வி நிர்வாக சேவை தரம் மூன்றுக்கு மேலும் 15 பேர் நியமனம்;ஐவர் தமிழர்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை தரம் III பதவிக்கு மேலும் 15 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் விபரங்களை பொதுச் சேவை ஆணைக்குழு கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது. நியமனம் வழங்கப்பட்டுள்ள 15 பேரில் ஐந்து பேர் தமிழர்கள். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு ரி.ஞானசுந்தரம் –திட்டமிடல் (யாழ்ப்பாணம்), எம்.அன்னமலர்–விவசாயம் (வவுனியா), எம். ஐ.எம்.பரூக் –அரபு .ஏ.எஸ்.நஜீப் – அரபு,எம்.ரி.எம்.தாவூத் –அரபு

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் IIIக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில் 5 பேருக்கு நியமனம் வழங்கப்படாமல் பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரிசீலனையில் இருந்து வந்தது.

அவர்களில் இருந்தே 15 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையோரின் விபரங்கள் தொடர்ந்து பரிசீலனையில் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட 15 பேருக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ச-5)

## 8 மாதங்களில் 81 பேர் கடத்தல்

## கலைப்பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## மீள் பரீட்சைகள்-2006

கலைப்பீடம் மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகம் முதலாம்,இரண்டாம்,மூன்றாம் வருட மாணவர்களுக்கான முதலாம்,இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கும் (பருவ அரையாண்டுத்திட்டம்) முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகளுக்கும் (பழைய பாடத்திட்டம்) கலைப்பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்கெனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க தவறிய மாணவர்கள் தமது விண்ணப்பங்களை 30.04.2007 இற்கு முன்னர் கலைப்பீடாதிப்தி அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்,

வெளிமாவட்டங்களில் உள்ள மாணவர்கள் பின்வரும் விபரங்களை தொலைநகல் (0212223091) ஊடாகவோ, மின்னஞ்சல் e.mail:-sararts @ Jfn.ac.lk ஊடாகவோ சமர்பிக்குமாறும்,மீள் பரீட்சைக்கான உரிய கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுகளை பரீட்சை எடுப்பதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

01. முழுப்பெயர்:-
02. பதிவிலக்கம்:-
03. சுட்டெண்:-
04. விண்ணப்பிக்கும் பாட அலகுகள் (Course Units)
05. தேசிய அடையாள அட்டை இல.:-

மேலதிக விபரங்களுக்கு கலைப்பீடாதிபதி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். (தொ.இல.021 222 3091)

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம். (C-002)

கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் நடைபெறுவதற்கான குறிப்பிட்ட அறிகுறிகள் தோன்றவில்லை.எனினும் ஐக்கிய தேசியக் கட்சி எதனையும் எதிர்கொள்ள தன்னை தயார்படுத்தி வருகின்றது.


கட்சி தாவும் நடவடிக்கைகள் எதிர்வரும் வாரங்களில் ஒரு முக்கிய நிலையை அடையலாம். பல ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் மீண்டும் எம்மிடம் இணைவார்கள் என எதிர்பார்கிறோம்.

சில தகவல்களின்படி தற்போது அமைச்சர் பதவிகளில் உள்ள

இதேவேளை அரசாங்கம் தற்போது ஒரு உறுதியான நிலையை நாடாளுமன்றத்தில் கொண்டிருப்பதனால் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் இல்லை என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கிழக்கு மாகாணத்தை தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர் அரசாங்கம் ஒரு பொதுத் தேர்தலை நடத்தும் சாத்தியங்கள் உள்ளதாகவும் கூறப்படுகின்றது. (எ-5)

## கண்ணீர் அஞ்சலி



**திரு.மகானந்தன்**
**அழகேந்திரன் (சமாதான நீதிவான்)**
*(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை,காரைநகர்.)*

06.04.2007-ல் சிவபதமடைந்த அன்னாரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைவதுடன் அவரது இழப்பால் துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

இ.ஜெயராமன்
தலைவர்
தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம்
காரைநகர்.

தோப்புக்காடு,
காரைநகர். (c-001)

உள்ளன. தெரிவு செய்யப்பட்ட 15 பேருக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ச-5)

## 8 மாதங்களில் 81 பேர் கடத்தல்

(கொழும்பு)

கடந்த 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிவரை இலங்கையில் ஆட்கடத்தல் தொடர்பில் தமது அமைப்புக்கு 81 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இந் நிலையில் இவ்வாறான கடத்தல் சம்பவங்களைத் தடுக்க அரசாங்கம் உரிய முனைப்பை மேற்கொள்ள வேண்டுமென ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

தமக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் கடத்தப்பட்ட 81 பேரின் பெயர் விபரங்களை ஆசிய மனித உரிமைகள் ஆணையகம்வெளியிட்டுள்ளது.(ச-3)


## விற்பனைக்கு
சிங்கர் பிறிச் RNF 250
(நியூமொடல் புதியது)
விற்பனைக்கு உண்டு
தொடர்பு:- அம்பாள் மில்
மல்லாகம் சந்தி, சங்கானை.
தொ.பே.0776668918
(821)

வீணை உயர்தரமானது; வித்துவானும் தேர்ந்தவர்தான், ஆனால் ஒரு நரம்பு மட்டும் ஓர் இடத்தில் தளர்ந்திருக்கிறது என்றால் வீணையின் நாதமும் கெடும்; வித்துவானின் உழைப்பும் பாழ்படும்.

—அறிஞர் அண்ணா

வலம்புரி

## தமிழகக் கடற்படை அதிகாரியின் அர்த்தமுள்ள கருத்து

இலங்கை கடற்படையுடன் கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டால் இந்திய கடற்படையினர், விடுதலைப்புலிகளுடன் மோதலில் ஈடுபடும் சந்தர்ப்பம் ஏற்படும்.

இவ்வாறு தமிழக கடற்படை அதிகாரி கூறியுள்ளார். இலங்கை-இந்திய கடற்படை ரோந்து குறித்த வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ள நிலையில் இலங்கை-இந்திய கடற்படைகளின் கூட்டு ரோந்து ஆபத்தானது என தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இவ்வாறு ஒட்டு மொத்தத் தமிழகமும் கூட்டு கடல் ரோந்தை கண்டிக்கும் நிலையில், இந்திய மத்திய அரசு இலங்கை கடற்படையுடன் கூட்டு ரோந்தில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ளமை சந்தேகத்தைத் தருவதாகவுள்ளது.

இந்நிலையில் இலங்கை கடற்படையுடன் இந்திய கடற்படையும் சேர்ந்து கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுவது விடுதலைப்புலிகளுடன் மோதலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் என தமிழக கடற்படை அதிகாரி கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

தமிழக கடற்படை அதிகாரி கூறிய விடயத்தை இந்திய மத்திய அரசுசீர் தூக்கிப் பார்க்க வேண்டிய தேவையை தோற்றுவித்துள்ளது.

அதாவது, ஜே.ஆர்.ஜெவர்த்தனா ராஜீவ் காந்தியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் இந்திய அமைதிப்படையை இலங்கைக்குக் கொண்டு வந்தார். இதன் ஊடாக இலங்கைப் படைகளுக்குப் பதிலாக இந்திய அமைதிப்படையை விடுதலைப்புலிகளுடன் மோத வைத்தார்.

இந்திய கிரிக்கெட் அணி உலகக்கிண்ணப் போட்டியில் கிடைத்த தோல்வியும், ஏமாற்றமும் போல் ராஜீவ் காந்தியும் ஜே.ஆர்.ஜெயவர்தனா

# இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடுவது இலங்கைக்கு தொல்லை தரக்கூடிய விடயம்

## ஜே.வி.பி.சாடல்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிடுவது தொல்லை தரக்கூடியது என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சாடியுள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகமான டெய்லி மிரருக்கு சோமவன்ச அமரசிங்க அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். எத்தனை முறைதான் அவர்கள் இதனை தெரிவிப்பர்? இது பற்றி அரசாங்கம்தான் சிந்தித்துப்பார்க்க வேண்டும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று அவர்கள் நிபந்தனை விதித்துள்ளனர். அப்படியானால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

எதுவித நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தைக்குப் புலிகள் வந்தால் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குப் போகலாம். அப்படியில்லையெனில் பேச்சுவார்த்தைக்குப் போக வேண்டியதில்லை. இராணுவ நடவடிக்கைகளை கைவிடக்கூடாது. தற்போதைய நடவடிக்கைகள் தொடர வேண்டும்.

விடுதலைப்புலிகளின் வான்பலம் குறித்து கவலை கொள்ளத்தேவையில்லை. இது ஒன்றும் அணு ஆயுதப் போர் அல்ல. மரபுவழி யுத்தம் தான். இந்த யுத்தத்தில் விடுதலைப்புலிகளால் வெல்ல முடியாது. கிழக்கை இழந்துள்ள நிலையில் ஆட்சேர்ப்பு எளிதானது அல்ல. அவர்கள் பேச்சுக்கு வருவதற்கும் இதுவே காரணம் என்றார்.

இந்த நாட்டுக்கு எந்த ஒரு சர்வதேசத்தின் உதவியும் தேவையில்லை. ஆனால் நாம் இறைமையுள்ள ஒரு தேசம் அதே நேரத்தில் சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு உறுப்பு நாடு. ஆகையால் எதுவித நிபந்தனையுமின்றி இந்த நாட்டுக்கு அவர்கள் ஏன் உதவக் கூடாது? எமது அரசியல் யாப்பு சனநாயகத் தன்மை கொண்டது.

இருந்தபோதும் நாம் சனநாயக ரீதியாக இயங்குவதில் சில சிக்கல்கள் உள்ளன. இங்கே தேசிய வேறுபட்ட இனங்களிடையே சமநிலை இன்மையால் இங்கே இனப்பிரச்சினை உள்ளது என்பதனை நாம் ஒப்புக்கொள்கிறோம்.

இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் நிலை நாட்ட வேண்டியது அரசாங்கமாகும். அதுவே பிரச்சினைக்குத் தீர்வு ஆகும்.

அனைத்துலகத்தின் அனுசரணை அல்லது தலையீடு என்பதனை நாம் ஏற்றுக் கொண்டால் அவர்களின் முதலீட்டுக்கும் தயாராக இருக்க வேண்டும். அதனை ஒரு போதும் செய்யக் கூடாது.

இந்தியாவின் தலையீடு நமக்கு ஒருபோதும் உதவிக்கரமாக இருக்காது. அது நமக்கு தொல்லைதரக் கூடிய மோசமானதாக அமையும். ஆகையால் எந்த ஒரு நாட்டினதும் எந்த வகையான தலையீட்டையும் நாம் ஒப்புக்கொள்ளக் கூடாது. ஏனெனில் அது பிரச்சினைக்குத் தீர்வாகாது. (ச)

# ஒற்றர்கள் முத்திரை குத்தப்படுகிறது அரசசார்பற்ற நிறுவனங்கள் கவலை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கும், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவி வரும் தமக்கு அங்கு ஒற்றர் என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடரில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மனித உரிமையை காப்பவர்கள் என்ற எமது பெயரை சில கட்சிகள் நாட்டின் நலனுக்கு எதிரானவர்கள் என மாற்ற முயல்வது வேதனையை தருகின்றது.

மனித உரிமைகளை பாதுகாப்பவர்கள் என்ற முறையில் நாம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை செயற்பாட்டுடன் இணைந்து செயற்படுகின்றோம். அதில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையும் உள்ளடங்கும். நாம் எமது எல்லா வளங்களையும் பயன்படுத்தி மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் அதனை மேம்படுத்துவதிலும் ஈடுபடுவோம் என ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். சில அரசாங்க ஊடகங்களும் அரசாங்க அதிகாரிகளும் மனித உரிமைகளை பாதுகாக்கவும் அதனை மேம்படுத்தவும் பணியாற்றுபவர்களுக்கு எதிராக பொது மக்களை திரட்டி போராட்டம் நடத்துவது எமக்கு கவலையைத் தருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நாட்டுக்கு உள்ளேயும் வெளியிலும் இருந்து செயற்படுவதுடன் தேசிய மற்றும் சர்வதேச பங்காளர்கள் நாட்டில் நடைபெறும் மோதல்களை நிறுத்தி அமைதி வழியிலான தீர்வைக்காண செயலாற்றுவதுடன் முழு அளவிலான மனித உரிமைகளுடன் எல்லா மக்களும் வாழ வழி ஏற்படுத்த வேண்டும் எனவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கேட்டுக்கொண்டுள்ளன. (ச-5)

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி ஈழ அகதிகள் தமிழகத்தில் தவிப்பு

(கொழும்பு)

தமிழகம் சின்னசேலத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகள் அடிப்படை வசதிகளின்றி பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குடிநீர் தட்டுப்பாடும் உள்ளது. வெகுதூரம் சென்றே தண்ணீர் எடுத்துவரவேண்டிய நிலைக்கு அகதிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

சின்ன சேலத்தில் அமையப் பெற்றுள்ள அகதி முகாமில் தங்கியுள்ள 85 குடும்பங்களைச் சேர்ந்த 323 பேரும் குடியிருப்புப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கீற்று மற்றும் கொட்டகை அமைத்து வாழவேண்டிய சூழலுக்கு ஆட்பட்டுள்ளனர். மலசல கூட வசதிகள், குடியிருக்கப் போதுமான இடவசதி இன்றி அவலப்படும் இலங்கை அகதிகள், அரசு மூலம் வழங்கப்படும் உதவிகள் போதுமானதாக இன்மையால் கூலிவேலை செய்தே வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் அகதி முகாமில் வசிப்போரின் குடியிருப்புக்களில் ஆங்காங்கே விரிசல் ஏற்பட்டுள்ளதால் அகதிகள் இரவில் தூங்க முடியாது அச்சமடைந்துள்ளனர்.

ஓரளவேனும் போதுமான மின்சார வசதியின்றி இருளில்

# கரையோரப் பகுதிகள் மீது

போட்டியில் கிடைத்த தோல்வியும், ஏமாற்றமும் போல் ராஜீவ் காந்தியும் ஜே.ஆர்.ஜெயவர்தனாவிடம் ஏமாந்து போனார்.

இந்திய அமைதிப்படையை விடுதலைப்புலிகளுடன் மோத வைத்து இலங்கை இராணுவத்திற்கு ஏற்படக்கூடிய இழப்புக்களை தவிர்த்ததுடன் ஈழத்தமிழர்களுடன் இந்தியாவுக்கிருந்த நல்லுறவையும் கெடுத்துவிட்டார்.

இது ராஜீவ் காந்தியின் அரசியல் அனுபவ இன்மையையும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசியல் சாணக்கியத்தையும் எடுத்துக்காட்டுவதாக இருக்கும்.

ராஜீவ் காந்தி விட்ட அதே தவறை மீண்டும் ஒரு தடவை இந்திய மத்திய அரசு விடலாகாது என்பதே ஈழத்தமிழர்களின் விருப்பம் எனினும் விடுதலைப்புலிகளுடன் இந்தியப் படைகளை மோத வைப்பதற்கான வியூகங்கள் இலங்கை அரசினால் மேற்கொள்வது தெளிவாகின்றது.

இதற்கு இந்திய மத்திய அரசு உடன் போகுமாயின் தமிழக கடற்படை அதிகாரி கூறியது நிஜமாகும். அப்போது அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

## கரையோரப் பகுதிகள் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் தென் கரையோரத்தின் சில பகுதிகளில் உள்ள முன்னரங்கப் பாதுகாப்பு மையங்கள் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளினால் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

காலை 7 மணி முதல் சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக வீழ்ந்து வெடித்த இவ் எறிகணைகளின் வெடிப்புச் சத்தத்தினால் யாழ்.நகரப் பகுதி அதிர்ந்தது. நாவற்குழி , கேரதீவு முனை மற்றும் கிழக்கு அரியாலை என்பவற்றை உள்ளடக்கிய முக்கோணப் பிரதேசத்தினுள் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது.

எறிகணை வீச்சில் ஆறு படையினர் படுகாயமடைந்ததாகவும் மேலும் சிலர் சிறு காயங்களுக்குள்ளானதாகவும் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## கடத்தப்பட்ட மாணவன் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் நாகேந்திரம் ராஜலக்சுமணன் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார். கடத்தப்பட்டு கடுமையாக தாக்கப்பட்ட பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## கொமர்ஷல் வங்கி திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கொமர்ஷல் வங்கிக்கிளைகளும் புது வருடப்பிறப்புத் தினமாக சனிக்கிழமை காலை 11 மணிக்கு வாடிக்கையாளர்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக விசேடமாக திறந்திருக்குமென வங்கி முகாமையாளர் தெரிவித்தார். (ச-3)

ஓரளவேனும் போதுமான மின்சார வசதியின்றி இருளில் வாழும் அகதிகள்,குடிநீர் பெற ஒரு கிலோ மீற்றர் செல்ல வேண்டிய நிலையுள்ளது. அரசு வழங்கும் நிதியுதவி ஒழுங்கு முறையாக வழங்கப்படாததை சுட்டிக்காட்டியுள்ள அகதிகள் நிதியுதவி தொடர்பில் தம்மிடம் வரும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி எடுக்க வேண்டும் என்றும் மாவட்ட செயலாளரிடம் அகதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-5)

## மேலும் 14 குடும்பங்கள் அரச பகுதிக்கு இடம் பெயர்வு

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் நேற்று 5 மணியளவில் இடம் பெற்ற மோதல் சம்பவமொன்றில் இடையில் அகப்பட்டு வயோதிபப் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர் 60 வயதுடைய சுப்பிரமணியம் சிந்தாமணி என அடையாளம் தெரிவிக்கப்படுகின்றது. இந்த மோதல் சம்பவத்தில் மூன்று விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களை பொலிஸார் வவுனியா வைத்தியசாலையில் கையளித்துள்ளனர். இதற்கிடையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெறும் பகுதிகளில் இருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மேலும் ஒரு தொகுதி மக்கள் வந்துள்ளதாகவும் அவர்கள் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிகாரிகள் கூறுகின்றார்கள்.14 குடும்பங்களைச் சேர்ந்த 43 பேரே இவ்வாறு வந்துள்ளதாகவும் அரச தரப்புத் தெரிவிக்கின்றது. (ச)

# குற்றச்சாட்டுக்குப் பதிலளிப்பதற்கு கால அவகாசம் கோருகிறார் சிறிபதி

(கொழும்பு)

கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாகத் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க கால அவகாசம் தேவை என முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அந்தக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரி பால சிறிசேனவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தான் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தனக்குப் பதில் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் பதில் வழங்குவதாகவும் சிறிபதி சூரியாராட்சி அக் கடிதத்தில் கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி கட்சியின் ஒழுங்கை மீறிச் செயற்பட்டதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம்குற்றப்பத்திரிகையைமுன்வைத்தார்.

அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு உரிய பதிலை 14 நாள்களுக்குள் வழங்கத் தவறினால் கட்சியிலிருந்து வெளியேற்ற மத்திய குழுவுக்கு சிபாரிசு செய்யப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சிறிபதி சூரியாராட்சியுடன் நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு இவ்வாறான குற்றப்பத்திரிகை முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-3)

## தமிழ்க்...

படவில்லை. இராணுவத் தீர்வை நோக் கிய நகர்வே மேற்கொள்ளப்படுகின்றது.

இந் நிலையில் பேச்சுவார்த்தைக்கான அழுத்தங்களை இந்தியா மேற்கொள்ள வேண்டும். இதற்கு இந்தியா தனது முழு முயற்சியையும் மேற்கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-3)

# 2 ஆயிரத்து 600 பேர் ஆசிரியராக நியமனம்

(கொழும்பு)

2ஆயிரத்து 600 பேர் அடுத்த மாதம் அளவில் புதிதாக ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றார்கள்.

கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி ஆசிரியர்களாக இருப்பவர்களே இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள் என்று தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் சிறிலால் மேனிஸ் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு இந்தப் புதிய கல்விசார் ஊழியர்கள் நியமிக்கப்பட இருப்பதாக அவர் கூறினார். (ச-3)

## படகு...

நான்கு பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.இதில் இருவர் டீசல்கானை பிடித்து நீந்தியவாறு நேற்றுக்காலை இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.

இதேவேளை மற்றுமொரு படகில் 33 இலங்கையர் அகதிகளாக இந்தியாவின் பம்பன் கடற்கரையைச் சென்றடைந்துள்ளனர். யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள் விசாரணையின் பின்னர் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன (எ-3)

# கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.எஸ்.சிறிவர்த்தன, லஞ்ச ஊழல் மோசடி குற்றத்தடுப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொண்டர் ஆசிரியர் ஒருவருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாகக்கூறி 50 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப்பெற்றுக் கொண்ட போது அவர் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழுவின் புலனாய்வுப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நமில் குறுகே தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க குறித்த கல்வி அமைச்சின் செயலாளர் 2 லட்சம் ரூபா வீதம் பணம் கோரியிருந்ததாகவும் நமில் குறுகே கூறியுள்ளார்.

நியமனம் வழங்குவதற்கு முன்னர் ஒரு லட்சமும் நியமனத்திற்குப் பின்னர் மிகுதி ஒரு லட்சமும் பெற்றுக் கொள்ளும்அடிப்படையிலேயே இந்த நடவடிக்கைளில் ஈடுபட்டதாக விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இவருக்கு லஞ்சம் பெற்றுக் கொடுக்க தரகராகச் செயற்பட்ட ஒருவரையும்ஆணைக் குழுவினர் கைது செய்துள்ளனர். (ச-3)

# வவுனியாவில் நால்வர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா கூமாங்குளத்தில் நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மூவரும் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவருமே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கூமாங்குளத்திலுள்ள வீடொன்றில் இருந்த சிறுவன் ஒருவனும் வயோதிபர் இருவரும் மற்றும் அந்த வீட்டிற்கு முன்பாக வீதியில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவருமே நேற்று மாலை 5.45 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பாதுகாப்புச் செயலாளரின் ...

பாதுகாப்புத் துறையில் பிரதான பணிகளை மேற்கொள்பவர் தங்கள் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு அரசியல்வாதிகள் தடையாக இருக்கக் கூடாது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு பாதுகாப்புச் செயலாளரின் பணிகள் குறித்து எந்தவித தெளிவும் இல்லை என்பது தற்போது தெளிவாகின்றது. அவரின் கூற்று அதனையே வெளிக்காட்டுக்கின்றது.

பாதுகாப்புச் செயலாளராக யார் பதவியிலிருக்க வேண்டும்என்பதனைத் தீர்மானிப்பது கட்சித் தலைவர் அல்ல. ஜனாதிபதியே அந்தத் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்.

பாதுகாப்புத் தொடர்பான கொள்கைகளை அமுல்படுத்துவது ஜனாதிபதியினதும் பாதுகாப்புச் செயலாளரினதும் கடமையாகும். யுத்தத்தைச் செய்வது படைத் தளபதிகளின் கடமையாகும்.

கடந்த ஒன்றரை வருடகாலப் பகுதியில் யுத்தத்தை சிறப்பாக செய்துள்ளோம். பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் நான் சிறப்பாக செயற்பட்டுள்ளேன் என பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார். (ச-5)

## மன்னார் முள்ளிக்...
## புலிகள் மீதான...

மன்னார் முள்ளிக்குளத்தில் நேற்று முன்தினம் படையினரின் பாதுகாப்பு முன்னரங்கு மீது புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் படைவீரர் ஒருவர் பலியானார்.மற்றும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து படையினர் நடத்திய பதில் தாக்குதலில் 20 புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கிளைமோர் ஒன்றை பொருத்திக் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் மீது படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.இத்தாக்குதல் வவுனியா நெல்லுக்குளம் பிரதேசத்திலுள்ள தரணிக்குளம் என்ற இடத்தில் இரவு 10.30 மணியளவில் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சீரற்ற...

ஆண்டு ஏப்ரல் மாதம் 192.3 மி.மி. மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதானிப்பு அதிகாரி தெரி வித்துள்ளார்.

அதேவேளை இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் முதல் பத்துத் தினங்களுக்கு 17.4 மி.மி. மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)


## முன்னேற்ற முயற்சி...

மன்னார் முள்ளிக்குளத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட முன் நகர்வை தமிழீழ விடுதலைப் புலிகள் முறியடித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.இம்முறியடிப்புச் சமரில் இராணுவத்தினரின் 8சடலங்களும் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா மேற்குப் பகுதியிலுள்ள மன்னார் இரணைஇலுப்பைக் குளம் பகுதியிலிருந்து முள்ளிக் குளம் நோக்கி நேற்று முன்தினம் மாலை முன்நகர்வு நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

முன்நகர்வுக்கு எதிராக தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதல் நேற்றுப் புதன் கிழமை காலை முடிபுக்கு வந்தது. முறியடிப்புத் தாக்குதலில் இராணுவத்தினர் இழப்புக்களுடன் தமது நிலைகளுக்கு பின்வாங்கிச் சென்றனர் என அவர் கூறினார்.

இத் தாக்குதலில் ஏ.கே.எல்.எம்ஜி. ரகத் துப்பாக்கி ஒன்றும், ரி-56 2ரகத் துப்பாக்கிகள் 11, ரி-81ரகத்




**ZOA REFUGEE CARE**
**VACANCY FOR PROGRAMME MANAGER**
**JAFFNA, SRI LANKA**

ZOA REFUGEE CARE

**DESCRIPTION:**

ZOA is present in Sri Lanka since 1995, ZOA started to implement a relief & recovery programme for displaced and host population in North and East of Sri Lanka in 1995. ZOA Refugee Care Sri Lanka's Mission is to support refugees, internally displaced, returnees and other Sri Lankans affected by conflict or natural disaster in their transition from conflict to peace, from insecurity to stability, from relief to development and from dependence to self-reliance. Currently ZOA operates in the districts of Colombo, Anuradhapura, Mannar, Trincomalee, Ampara, Batticaloa, Kilinochchi and Jaffna.

**PROGRAMME MANAGER - JAFFNA**

She / he will be responsible for:
- Management of the **ZOA** organisation in the Jaffna programme
- Assist with formulation and implementation of the Programme Plan. This includes relevant research, context analysis, assessment and participatory planning.
- Support Project Cycle management, including programme planning, project formulation, budgeting, monitoring and reporting.
- Help to maintain relationships with all relevant actors in programme area.
- Responsible for the management of programme staff in Jaffna.
- Supervision and control of the administrative and financial programme organization with the help of Head Office in Colombo.
- Participate in country-wide program me and knowledge development.
- Relevant security management responsibilities.

- Involve in any other responsibility as appropriate.

**Selection criteria include:**

- Previous work experience in humanitarian assistance in a senior position.
- Knowledge of the humanitarian situation in the North and East.
- Minimum professional education: university degree in a relevant discipline.
- Knowledge of and experience with project cycle management.
- Experience in working in a team and people management.
- Fluent in English and preferably working knowledge of Tamil and Sinhala.
- Flexible and dynamic attitude.
- Excellent communication skills and ability to coach others.
- Ability to work in a multi-cultural and multi-religious setting.
- Experience in computer programs like Windows, MS Word, and Excel.

**Other remarks:**

- The Programme Manager will be based in Jaffna with traveling to Colombo and east.
- Ability to understand the security risks associated with the location and operation.
- ZOA offers a competitive package compensate with the International NGO standards.

**Closing date:**

Applicants should submit their application on or before the 25th of April 2007. Short-listed candidates will be informed about the time and venue of the interviews. For further information on ZOA Refugee Care, please contact 4-513091.

**How to apply:**

Please forward your applications by enclosing your letter of motivation and Curriculum Vitae. Because of the number of applications we normally receive, only short listed candidates will be contacted.

Send details to – address - 136/2, Isipathana Mawatha,Colombo 05, phone no - 4513091, fax - 4518827, email – hrm@zoasrilanka.org

**Note: application should be sent by fax or E-mail address.**

(உ-த-52)


# A/L 2009

## (கலை, வர்த்தகப் பிரிவுகள்)

## ஆரம்பம்-15/04/2007 ஞாயிறு

## காலை 8 மணி

| | |
|---|---|
| கணக்கீடு -D.SAM | தமிழ் – மீரா |
| வணிகக் கல்வி – பசில் | இந்துநாகரிகம் – ஜோதீஷ்வரன் |
| பொருளியல் -S.S. சிறி | அளவையியல் – மோகன் |
| ஆங்கிலம் – சுதர்ஷன் | கிறிஸ்தவம் – மல்லிகா |
| பொதுவினா – தவசேகர் | புவியியல் – இக்னேசியஸ் |
| நாடகம் – கனகேஷ்வரன் | அரசியல் – இளங்கோ |



## DMI JAFFNA

(c-003)


2ரகத் துப்பாக்கிகள் 11, ரி-81ரகத் துப்பாக்கி ஒன்று, ஆ.ர்.பி.ஜி.ஒன்று, பி.கே.எல்.எம்.ஜி.ரகத் துப்பாக்கி ஒன்று, 40 மில்லிமீற்றர் குண்டு செலுத்தி ஒன்று மற்றும் வெடி பொருள்களும் கொல்லப்பட்ட 8 இராணுவத்தினரின் சடலங்களை யும் கைப்பற்றியுள்ளதாகவும் இள ந்திரையன் தெரிவித்தார்.

தமது தரப்பில் மூவர் வீரச்சாவ டைந்ததாக இளந்திரையன் மேலும் கூறியுள்ளார். (ச-3,5)

## அளவெட்டி...

விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி திருமதி சறோ ஜினி இளங்கோவன், பிரேதபரிசோ லையின் பின் சடலத்தை உறவினர் களிடம் ஒப்படைக்குமாறு மானிப் பாய்ப் பொலிஸாருக்கு உத்தரவிட் டார். (ச-5)


# மலிவு விற்பனை

சாறி வகைகள், பட்டுச்சாறி வகைகள், சல்வார் துணிவகைகள், ஸ்கேட் அன் பிள வுஸ், சிறுவர்களுக்கான ஆடைகள், டெனிம் ரவுசர்கள், சேட் வகைகள், அனைத் தையும் மலிவாகப் பெற்றுக் கொள்ள உடன் விரையுங்கள். யாழ்.நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள் நிகரில்லா தரங்களின் அழகிய குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

## கிறின் பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.

(822)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.